# பாரம்பரி கலைகளின் தொடர் செயற்பாட்டை பேணுவதில் கோயில் சடங்குகளினதும் திருவிழாக்களினதும் வகிபாகம்" மட்டக்களப்பு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**வடிவேல் இன்பமோகன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
நுண்கலைத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
vinpamohan@yahoo.com

**ABSTRACT**

*Traditional art performances maintain many socio cultural practices and they also function as an important aesthetic interest of the people. In the contemporary period even though they are performed in many areas, they fail in some of the areas in Batticaloa. The performance of these arts are taking place during the annual rituals and temple festivals it is seen and enjoyed by the people who gathered in the temple annual rituals and festivals. The objectives of this study are; to identify the current situation of the performance of the traditional art in Batticaloa, to point out the role of temple rituals and festivals, to find out how much the performance at the temples will help to maintain these traditional arts. Since this is a research based on society and its culture and its art, exploratory method is being used in this research. Qualitative method is also used to come to the conclusion and recommendation of this research.*

**Key words:** *Traditional art, ritual, festival, koothar.*

## 1. அறிமுகம்

மட்டக்களப்பில் பல பாரம்பரிய கலைவடிவங்கள் பயில்வில் உள்ளன. இவற்றின் பயில்வில் ஆரம்ப காலங்களுடன் ஒப்பிடும் போது ஒரு வீழ்ச்சி நிலையினை அவதானிக்கலாம். பாரம்பரியமாக கலைகள் பயிலப்பட்டுவந்த பல கிராமங்களில் சமகாலத்தில் பாரம்பரிய கலைகளின் பயில்வு முற்றாக வழக்கொழுந்த நிலையையும், சில கிராமங்களில் அருகலாக இடம்பெறுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இருந்தும் குறிப்பிட்ட சில பிரதேசங்களுடன் இணைந்த கிராமங்களில் பாரம்பரிய கலைகள் வீரியமான முறையில் பயிலப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடயதாகவும் உள்ளது. இப்பிரதேசங்களில் பாரம்பரிய கலைகளின் அளிக்கையின் தொடர் செயற்பாட்டைப் பேணுவதில் கோயிற் சடங்குகளும் திருவிழாக்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 2. முறையியல்

இந்த ஆய்வின் மையப்பொருள் பாரம்பரிய கலைகளின் அளிக்கையில் கோயில் சடங்குகளும் திருவிழாக்களும் பெறும் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்துதல், அதன்மூலம் தொடரப்படும் பாரம்பரிய கலைகளின் தொடர்செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடயாளம் காண்பதுமாகும். எனவே இது சமூகம், அதன் பின்புலம், அதன் பண்பாடு என்பதன் அடிப்படைகளைக் கொண்ட ஆய்வாக அமைவதன் காரணமாக விளக்க முறையியல் (Exploratory method) இவ்வாய்வில் கையாளப்படுகின்றது. இவ்வாய்வில் பண்புசார்ஆய்வு முறையியல் (Qualitative research design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படுகிறது. கட்டமைப்பற்ற நேர்காணலும் (Unstructure



ISBN 978-955-627-120-1

Interview) நேரடியான அவதானிப்பும் (Direct Observation) ஆய்வுக்கான கருவிகளாகப் (Research tools) பயன்படுத்தப்படுகின்றன. பிரதான தகவல் வழங்கி (Key informatory ) Snowball method என்பன Sampling Technique ஆகப் பயன்படுத்தப்படும். பண்புசார் அடிப்படையில் தகவல்கள் நுணுகி ஆராயப்பட்டு பண்புசார் ஆய்வின் அடிப்படையில் பரிந்துரைகளும் முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

## 3. பெறுபேறும் கருத்துரையும்

மட்டக்களப்பில் பாரம்பரிய கலைகள் உயிர்த்துடிப்புள்ளதொரு வடிவமாகத் திகழ்கின்றன. பாரம்பரிய கலை என்னும் வகைப்பாட்டினுள் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, மகிடிக் கூத்து, பறைமேளக் கூத்து போன்றவற்றை உள்ளடக்கலாம். இப்பாரம்பரிய கலைச் செயற்பாட்டை முன்னெடுப்பது தொடர்பாக மூன்று விதமான போக்குகள் நிலவுகின்றன. இவை

1. பாரம்பரியமாக ஆரம்பகாலத்தில் நிகழ்த்தப்பட்டு வந்த முறையில் தொடர்ந்து நிகழ்த்துதல்
2. புத்தாக்கச் செயற்பாடு
3. மீளுருவாக்கச் செயற்பாடு

என்பனவாகும்.

பாரம்பரிய கலைகள் அவற்றுக்கென ஒரு நிகழ்த்துகை பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. அவை கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்துகை செய்யப்படுவன. இக்கலைகள் இன்றுவரை கிராமியக் மக்களின் பயில்வுக்கும் இரசனைக்கும் உரியதாகவே இருந்துவருகின்றன. பாரம்பரிய கலைகளில் வடமோடி, தென் மோடிக் கூத்துக்களே கூடுதலான அளவில் பயிலப்படுகின்றன. வசந்தன், மகுடி போன்றவற்றின் பயில்வு அருகலாகவும், பறைமேளக் கூத்து வழக்கொழிந்த நிலையிலுமே காணப்படுகின்றது. இக்கலைகளின் பயில்வு குறிப்பிடும் படியான சில பிரதேசங்களிலேயே செழிமையுடன் தொடரப்படுகிறது. சமூக வளர்ச்சியும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களுமே இதற்கான காரணமாகும். பாரம்பரிய கலைகளின் பயில்வு தொடர்பாக இ.முத்தையா அவர்கள் "பாரம்பரிய கூத்து என்பது ஒரு குறிப்பிட்ட காலத்து மக்கள் தங்கள் அனுபவங்களின் ஊடாக வாழ்க்கையையும் புற உலகத்தையும் புரிந்து கொண்டதின் அழகியல் வெளிப்பாடாகும். இத்தகைய புரிதலை அடுத்து வந்தவர்கள் தங்களின் அனுபவங்களின் அடிப்படையில் மறுக்கலாம்" (முத்தையா,இ.,2011, ப:10) எனக் குறிப்பிடுகின்றார். இங்கு சமூகத் தேவையே அவற்றின் பயில்வில் முக்கியம், முக்கியம் இன்மையைத் தீமானிக்கின்றது. பாரம்பரிய கலைகளின் பயில்வு சில கிராமங்களில் பயிலப்படாததிற்கும் சில கிராமங்களில் வீரியத்துடன் தொடரப்படுவதற்கு அச்சமூகங்களின் தேவையினை அடிப்படையாக கொண்து என்பதையே நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

1960களில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களுக்கு பாரம்பரிய கலைகளில் குறிப்பாக கூத்துக்களின் மேல் ஏற்பட்ட கவனக் குவிப்பு பாரம்பரிய கலை பற்றிய நோக்கை இன்னொரு தளத்திற்கு கொண்டு சென்றது. அவர் பயில்வில் இருந்த பாரம்பரிய கலைகள் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "இன்று ஆடப்படும் நாட்டுக் கூத்துக்கள் நாடகத் தன்மையை இழந்து மக்களைக் கவரத் தவறி விடுகின்றன. இதற்குக் காரணம்



ISBN 978-955-627-120-1

> கூத்தில் ஆடல், இசை, நடிப்பு முதலியவற்றில் இணைப்பு இன்மையே. இதனால் கூத்துக்கள் வெறும் ஆட்டங்களாகவே முடிகின்றன. நாடகப் பாத்திரங்கள், பக்கப்பாட்டுக்காரர், அண்ணாவிமார் ஆகியோர் பாடும் போது இணைப்பு இருக்க வேண்டும். பாட்டு இசையை அமுக்காத முறையில் மத்தள அடி அமைய வேண்டும். பாத்திரங்கள் ஆடிப்பாடினால் மாத்திரம் போதாது. நடிக்கவும் வேண்டும். ஆட்டமும் பாட்டும் நடிப்பும் சேர்ந்து கதையையும் பாத்திரங்களின் குணாம்சத்தையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த வேண்டும். உடைகளும் ஒப்பனைகளும் பாத்திரத்திற்கேற்ப அமைதல் இன்றியமையாதது. எனவே ஆடல், பாடல், நடிப்பு, உடை, ஒப்பனை முதலியவற்றில் ஒருமைப்பாட்டினை உண்டாக்க முடியுமாயின் நாட்டுக்கூத்து பார்ப்போர் உள்ளத்தினையும் கவனத்தினையும் கவரும் ஆற்றலைப் பெற்று வளர்ச்சியடையும்'' (1990, பக்: 33-34).

பாரம்பரிய கூத்துக்களின் நலிவிற்கான காரணங்களாக மேற்குறிப்பிட்ட விடயங்களை அடையாளம் கண்ட வித்தியானந்தன் இவ்விடயங்களில் பாரம்பரிய கலைகளில் மாற்றத்தைக் கொண்டுவரும் போது அது எல்லா மக்களினதும் இரசனைக்குரியதாக அமையும் என்று கருதினார்.

சகல தரப்பினரதும் இரசனைக்குரியதாக மாற்றுவதே அதனை தொடர்ந்து பேனுவதற்கான வழியாக அமையும் என்பது வித்தியானந்தனின் நோக்கு அமைந்திருந்தது. பாரம்பரிய கலைகளில் மாற்றத்தை கொண்டு வந்து அதனை வீரியப்படுத்தும் நோக்குடன் செயற்பட்ட வித்தியானந்தன் நவீன நாடகத்திற்குரிய அம்சங்களை கூத்தில் இணைத்து அதனைப் படச்சட்ட மேடைக்குக் கொண்டுவந்தார். பாரம்பரிய கூத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்து அதனை தொடர்ந்து செழிமையுடன் பேணும் நோக்கில் வித்தியானந்தனின் செயற்பாடுகள் அமைந்தாலும் வித்தியானந்தன் அவர்களின் செயற்பாட்டால் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாகவே பாடசாலை மட்டப் போட்டிகளில் கூத்தும் உள்ளடக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இருந்தும் வித்தியானந்தனின் செயற்பாடு பாரம்பரிய கூத்தை செழுமையுடன் பேணுவதில் பெரியளவான பங்களிப்பை ஆற்றவில்லை.

கூத்து மீளுருவாக்கம் என்னும் செயற்பாடு கூத்தை செழிமையுடன் பேனுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இன்னொரு செயற்பாடாகும். மேற்கொள்ளப்படுகின்றது. கூத்து மீளுருவாக்கம் தொடர்பாக சி.ஜெயசங்கர் அவர்கள் குறிப்பிடும் போது,

> ''கூத்து மீளுருவாக்கம் என்பது திறந்த நிலையிலான வித்தியாசமான கற்றல் சூழல். இது மனிதர்களுக்கே இயல்பான கற்பனை, சிந்தனை, விமரிசன நோக்கு, படைப்பாற்றல் என்பவை பொருந்திய தனித்த ஆளுமைகளாகவும், குழுநிலையிலான சமூகமாகவும் தமது காலத்தை தாங்களே ஆக்கவும், காக்கவுமான சமூகங்களின் உருவாக்கங்களுக்கான செயலினூடாக கற்பதற்கான சமூதாய அரங்கச் வெளியாகும். கூத்து மீளுருவாக்கம் என்பது மகிழ்ச்சியானதும் சவால்கள் நிறைந்ததுமானதொரு கூத்துக் கலையாக்கச் செயற்பாடாகும். இது பங்குகொள் அரங்க ஆய்வுச் செயற்பாடு என்று அழைக்கப்படுகின்றது'' (2011, ப:.31).



ISBN 978-955-627-120-1

எனக் குறிப்பிடுகின்றார். இவ் மீளுருவாக்கச் செயற்பாட்டின் போது கூத்தில் சில இடங்கள் தொய்வான உள்ளன என உய்துணர்ந்து அதனை நிவர்த்தியாக்கி கூத்தை ஒரு சமூதாய அரங்காகக் கட்டமைத்தல் என்னும் கோசத்துடன் கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டாளர் செயற்பட்டனர். இக்கூத்து மீளுருவாக்கச் செயற்பாடானது கூத்து உயிர்வாழும் சமூகச் சூழலில் கூத்தர்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடாகவே அமைந்திருந்தது.

பாரம்பரிய கலைகளை பேணவும் அதன் தொடர் செயற்பாட்டுக்கு வழிவூட்டவும் புத்தாக்க, மீளுருவாக்கச் செயற்பாடுகள் அறிவியல் தளங்களில் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்ட போதும் இச்செயற்பாடுகள் கூத்துக்களை அவற்றின் சமூக, பண்பாட்டு அம்சங்களுடன் பேணுவதற்கு தவறியனவாகவே காணப்படுகின்றன. பாரம்பரிய கலைகளின் பயில்வு சில கிராமங்களில் முற்றாக விடுபட்டுள்ளன, சில கிராமங்களில் அருகலாகப் பயிலப்பட்டு வருகின்றது, சில கிராமங்களில் அவற்றின் வீரியத்துடன் முன்னெடுப்படும் நிலையும் உணரத்தக்கது. சில கிராமங்கள் அவற்றின் சமூகச் செயற்பாட்டுக்கு அவசியமெனக் கருதி பாரம்பரிய கலைகளின் பயில்வைத் தொடர்வதனையும், சில கிராமங்கள் வாழ்வியல் மாற்றத்திற்கேற்ப பாரம்பரிய கலைகளின் பயில்வை கைவிட்டதனையும் இங்கு அவதானிக்க கூடியதாகவுள்ளது. மேற்குறித்த புத்தாக்கச் செயற்பாட்டாளர்களினம், மீளுருவாக்கச் செயற்பாடுகளினதும் தாக்கம் வீழ்ச்சியுற்ற பிரதேசங்களில் பாரம்பரிய கலைகளை மீள வளர்த்தெடுப்பதற்கோ, செலுமையுடன் பாரம்பரிய கலைகளின் பயில்வைத் தொடரும் கிராமங்களில் அச்செளிமையான வளர்ச்சிக்குக் காரணமாகவே அமையவில்லை. இவ்விடத்தில் ‘‘எந்த அம்சங்கள் எவ்வகையில் பாதுகாக்கப்படுகின்ற என்பதை சமூகத்தில் நிலவும் பொருண்மை நிலைமைகளே நிர்ணயிக்கின்றன’’ (ராஜதுரை,எஸ்,வி.,1991:235). என்னும் அந்தோனியோ கிராம்ஷியின் கருத்துக்கள் ஒப்புநோக்கத்தக்கன. குறித்த மரபுகளின் தொடர் பேணுகையும் அவை கைவிடப்படுவதும் சமூகத் தேவையின் பாற்பட்டதாகவே அமைகின்றது.

மட்டக்களப்பில் பாரம்பரிய கலைகளின் பயில்வின் வீழ்சிக்கு அல்லது தொடரப்படாமைக்கு பல காரணங்களை குறிப்பிட்டாலும் பாரம்பரிய கலையின் பயில்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு அக்கலைவடிவங்களை குறித்த சமூகங்களின் வருடாந்த ஒன்று கூடலுக்கு களம் அமைக்கும் கோயில் சடங்குகளிலும் திருவிழாக்களிலும் அளிக்கை செய்வதை நோக்காகக் கொண்டு பயிலப்படுவதை அடிப்படையான காரணமாக குறிப்பிடலாம். பாரம்பரிய கலைகளின் நிகழ்த்துகைக்கும் சமய வழிபாட்டிற்கும் இடையே எப்பொழுதும் தொடர்பு இருந்தே வந்துள்ளது. மட்டக்களப்பில் இந்து சமய வழிபாட்டில் கோயிற் சடங்குகளினதும் திருவிழாக்களினதும் இடம் முக்கியமானது. சடங்கு வழிபாடு ஆகமம் சாரா வழிபாட்டு முறையாகவும் திருவிழா ஆகமம்சார் வழிபாட்டு முறையாகவும் விழங்குகின்றது. இவ்விரு வழிபாடும் மட்டக்களப்பில் கோயில்களில் ஆண்டுக்கொரு தடைவ மேற்கொள்ளப்படும் வழிபாட்டு முறைகளாகும். இவ்வழிபாடுகள் குறித்த கோயிலுடன் தொடர்புடைய சமூக உறுப்பினர்கள் இணைந்து கொள்ளும் ஒரு சமூக விழாவாகவே இடம்பெறும். பாரம்பரிய கலைவடிவங்களில் வசந்தன் கூத்து பறைமேளக் கூத்து என்பன முக்கியமாக சமய வழிபாட்டுடன் பிணைக்கப்பட்டிருந்தன. இதனைவிட கும்மி, கரகம் போன்ற பாரம்பரிய நடனவடிவங்களின் பயில்வும் குறிப்பிடத்தக்கது. இன்று பறை மேளக் கூத்து அளிக்கை அதன் வீரியத்தை இழந்துள்ள போதும் பறை இசைத்தல் மட்டக்களப்பில்



ISBN 978-955-627-120-1

கோயில் சடங்குடன் இணைந்த அடிப்படையானதும் அவசியமானதுமான ஒரு விடயமாக விளங்குகின்றது. இதன் காரணமாக இன்று பறையர் சமூகத்தைச் சேராதவர்களும் பறை இசைப்பதற்காக சடங்குக் கோயில்களுக்குச் செல்லும் வழக்கம் உள்ளது (தருமராசா,எல்., புதுமுகத்துவாரம்).

சுதாசிவ ஐயர் அவர்கள் மட்டக்களப்பில் பல பிரதேசங்களிலும் ஆடப்பட்ட வசந்தன் கவிகளைத் ''மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு'' என்னும் நூலாகப் பதிப்பித்து அதற்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடும் போது

> ''மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு பெரு வழக்கமாயுள்ளது. கண்ணகி தேவிக்கு ஆலயம் எல்லா ஊர்களிலும் உண்டு. அவற்றுள் சில மிகப் பிரசித்தி பெற்றன. … கண்ணகி தேவிக்கு விழாக் கொண்டாடும் நாட்களில் கிராமத்து மக்கள் இவ் வசந்தன் கவிகளைப் பாடி ஆடுவார்கள். வேறு கொண்டாட்டக் காலங்களிலும் பாடி ஆடுவார்கள். அக்காலங்களில் மக்களிடை மிக்க களிப்பும், வேடிக்கையும், விளையாட்டும், உட்சாகமும் இருக்கும். கண்ணகி தேவியே மட்டக்களப்பு மக்களுக்கு குலதெய்வமாகும். அத்தேவியினது வரலாறும், புகழும், பெருமையும் இப்பாடல்களில் அதிகம் வருதலைக் காணலாம்'' (1940, ப:xli)

சதாசிவஐயரின் கருத்துக்கு வளம் சேர்க்கும் வகையில் வீ.சி.கந்தையா அவர்கள் வசந்தன் கூத்து அளிக்கை செய்யப்படும் காலம் தொடர்பாகக் குறிப்பிடும் கருத்துக்கள் நோக்கத்தக்கன. ''சித்திரை தொடக்கம் ஆடியீறாகவுள்ள பகுதியே மட்டக்களப்பு நாட்டில் முன்னர் இக்கலை நிரம்பி வழிந்த காலமாகும். கண்ணகிதேவி வழிபாடு பற்றிய இன்னோர் ஆடலான கொம்பு விளையாட்டின் போது ஆவணி, புரட்டாதி ஆகிய மாதங்களிலும் இவை நடைபெறுவதுண்டு'' (2002, ப:200). வசந்தன் கூத்துக்களை கண்ணகியம்மன் கோயில்களில் நிகழ்த்துவதற்கென்றே பயிற்றுவித்து சடங்குகாலத்தில் கோயில் முன்றலில் ஆடுதல் மட்டக்களப்பில் பல கண்ணகியம்மன் கோயில்களிலும் காணப்படும் பொதுவழக்காக இருந்தது. இந்நிலைமை இன்றுவரை சில கண்ணகியம்மன் கோயில்களில் தொடரப்படுகின்றது.

மட்டக்களப்பின் பல கிராமங்கல் சடங்குக் கோயில்களும் திருவிழா இடம்பெறும் கோயில்களும் உள்ளன. சடங்குக் கோயில்களின் சடங்குகள் கண்ணகியம்மன் கோயிற் சடங்குடன் ஆரம்பமாகும். பொதுவாக வைகாசி மாத்தில் வரும் பூரனை அல்லது பூரணையை அண்டிய திங்கள் முடிவடையும் விதத்தில் சடங்குகள் இடம் பெறும். சடங்குகாலத்தில் இரவுவேளையில் கோயில்களில் பாரம்பரிய கலைகளான வடமோடி, தென்மோடிக் கூத்துகளை அளிக்கை செய்தல் பொதுவானதொரு மரபாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பின் பல பிரதேசங்களிலும் உள்ள கோயில் சடங்குகளிலும் வருடாவருடம் கூத்தை அளிக்கை செய்வது கூத்துக்காக இணையும் சமூகத்தின் பிரதான நோக்கமாக அமைகின்றது. 2017ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பாரம்பரிய கலைகளின் பயில்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் மன்முனைத் தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவு (பட்டிப்பளை), மன்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு (வவுணதீவு) என்பவற்றில் பாரம்பரிய கலைப் பயில்வுகளில் ஒன்றான வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் சடங்குக் கோயில்களில் ஆடப்பட்ட விபரங்கள் அடங்கிய



ISBN 978-955-627-120-1

அட்டவணை ஒன்று கீழே தரப்படுகின்றது. இவ்வட்டவணை களஆய்வின் போது பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

| இல | இடம் | கோவில் பெயர் | ஆடப்பட்ட கூத்து (கூத்தின் வகை) - இடம் |
|---|---|---|---|
| 01 | மண்டபத்தடி | காளி | கண்டியரசன் நாடகம் (தெ)*[1] – மண்டபத்தடி<br>அனுருத்திர நாடகம் (தெ) - எண்ணம்பாலைபூவல் |
| 02 | கன்னங்குடா | கண்ணகியம்மன் | சுந்தரி திருக்கல்யானம் (வ)*[2] - நொச்சண்டகல்<br>கண்டியரசன் நாடகம் (தெ) – மண்டபத்தடி<br>நளமகராசன் (தெ) - பருத்திச்சேனை<br>திருத்தொண்டர் நாடகம் (வ) - கன்னங்குடா<br>வாரணயுத்தம் (வ) – கன்னங்குடா |
| 03 | பரித்திச்சேனை | மாரியம்மன் | நளமகராசன் (தெ) பருத்திச்சேனை<br>குருக்கேத்திரன் போர் (வ) – கரையாக்கன்தீவு<br>கண்டடிராசன் (வ) மண்டபத்தடி |
| 04 | காயான்மடு | பிள்ளையார் | நளமகராசன் (தெ) - பருத்திச்சேனை<br>சுந்தரி திருக்கல்யானம் (வ) - நொச்சண்டகல் |
| 05 | நொச்சண்டகல் | கும்பனார் வைரவன் | சுந்தரி திருக்கல்யானம் (வ) - நொச்சண்டகல் |
| 06 | பாவற்கொடிச்சேனை | முருகன் **(நடக்கவிருப்பது)** | ஏகலைவன் (வ) - பாவற்கொடிச்சேனை<br>வள்ளியம்மன் நாடகம் (வ)- பாவற்கொடிச்சேனை |
| | | மாரியம்மன் | வாரணயுத்தம் (வ) – கன்னங்குடா |
| 07 | காஞ்சிரஞ்குடா | காளி | 17ஆம்,18ஆம் நாள் போர் (வ) - கொல்லன்நுலை<br>13ஆம்,14ஆம் நாள் போர் (வ) - காஞ்சிரஞ்குடா |
| 08 | கொல்லன்நுலை | ரசிங்க வைரவர் | 17ஆம்,18ஆம் நாள் போர் (வ) - கொல்லன்நுலை |

[1] * (தெ) தென்மோடிக் கூத்து

[2] * (வ) வடமோடிக் கூத்து



ISBN 978-955-627-120-1

| | | | |
|---|---|---|---|
| | | | அருச்சந்திர நாடகம் (வ) - கொக்கட்டிச்சோலை |
| 09 | இலுப்படிச்சேனை | காளி | பப்பரூவாகன் நாடகம் (வ) – கொத்தியாவலை |
| | | | சித்திரசேனன் சன்டை (வ) - இலுப்படிச்சேனை |
| 10 | விழாவட்டுவான் | மாரியம்மன் | இராமநாடகம் (வ) - விழாவட்டுவான் |
| | | | வள்ளியம்மன் நாடகம் (வ ) - விழாவட்டுவான் |
| | | | சத்தியவான சாவித்திரி (தெ) - மண்டபத்தடி |
| | | | வாழவீமன் நாடகம் (தெ) - விழாவட்டுவான் |
| | | பேச்சியம்மன் | பதரத்தன் போர் (வ) விழாவட்டுவான் |
| 11 | மகிழவட்டுவான் | மாரியம்மன் | சிலம்புச் செல்வி (தெ) – கன்னங்குடா |
| | | | சுந்தரி திருக்கல்யானம் (வ) கரவெட்டி |
| | | திரௌபதியம்மன் | வாரண யுத்தம் (வ) – கன்னங்குடா |
| | | | குயலவ நாடகம் (வ) - மகிழவட்டுவான் |
| 12 | ஈச்சந்தீவு | கண்ணகியம்மன் | சுந்தரி கல்யாணம் (வ ) - கரவெட்டி |
| | | | சித்திரசேனன் சன்டை (வ) - நாவற்காடு இறக்கம் |
| | | | நச்சுப் பொய்கை (வ) நாவற்காடு இறக்கம் |
| | | | 17ஆம்,18ஆம் நாள் போர் (வ) - ஈச்சந்தீவு |
| | | நாகதம்ரிரான் | வாரணயுத்தம் (வ) – கன்னங்குடா |
| | | | 17ஆம்,18ஆம் நாள் போர் (வ) - ஈச்சந்தீவு |
| 13 | நாவற்காடு இறக்கம் | மாாரியம்மன் | சித்திரசேனன் சன்டை (வ) - நாவற்காடு இறக்கம் |
| | | | திருத்தொண்டர் நாடகம் (வ) - கன்னங்குடா |
| 14 | கொத்தியாவலை | காளி | தருமர் அசுவமேத யாகம் (வ) -கொத்தியாவலை |
| | | | நளமகராாசன் (தெ) பருத்திச்சேனை |
| 15 | மகிழடித்தீவு | கண்ணகியம்மன் | அல்லி அருச்சுனா (தெ) - மகிழடித்தீவு |



ISBN 978-955-627-120-1

| | | | |
|---|---|---|---|
| 16 | பண்டாரியாவெளி | நாகதம்பிரான் | அல்லி நாடகம் (தெ) - மகிழடித்தீவு<br>இராமநாடகம் (வ) – அரசடித்தீவு<br>அருச்சந்திர நாடனம் (வ)- கொக்கொட்டுச் சோலை |
| 17 | திமிலதீவு | கிருஷ்ணன் கோயில் | அல்லி அருச்சுனா (வ) - திமிலதீவு |
| 18 | வவுணதீவு | காளி | குறவஞ்சி (வ) - வவுணதீவு |
| 19 | எண்ணம்பாலைபூவல் | நரசிம்ம வைரவர் | அனுருத்திர நாடகம் (தெ)– எண்ணம்பாலைபூவல்<br>வாரண யுத்தம் (வ) – கன்னங்குடா<br>நளமகராசன் (தெ) – பருத்திச்சேனை |
| 20 | மாவடிமுன்மாரி | முருகன் | ஆஞ்சனேய யுத்தம் (வ) – மாவடிமுன்மாரி |
| 21 | சொருவாமுனை | மாரியம்மன் | இராமநாடகம் (வ) - சொருவாமுனை<br>சராசந்தன் போர் (வ) - சொருவாமுனை |
| 22 | கரையாக்கன் தீவு | மாரியம்மன் | குருக்கேத்திரன் போர் (வ) – கரையாக்கன்தீவு |
| 23 | கரவெட்டி | காளி **(நடக்கவிருப்பது)** | இராமநாடகம் (வ) - கரவெட்டி<br>பக்காத்திருடன் (தெ) - கரவெட்டி |
| 24 | கொக்கட்டிச்சோலை | சிவன்கோயில் **(நடக்கவிருப்பது)** | அருச்சந்திர நாடகம் (வ) கொக்கட்டிச்சோலை |

இங்கு தாப்பட்டுள்ள அட்டவணையில் பிள்ளையார், முருகன், சிவன், முருகன், கிருஷ்ணர் கோயில்கள் திருவிழாக் கோயில்களாகும். ஏனையவை சடங்குக் கோயில்களாகும். 2017ஆம் ஆண்டு மாத்திரம் 16 கூத்துக்கள் இப்பிரதேசத்தில் ஆடப்பட்டுள்ளது (கோடீஸ்வரன்,வி,, கன்னங்குடா). இங்குள்ள கோயில்களில் விழாவட்டுவான் பேச்சியம்மன், காளி, மாரியம்மன், மற்றும் கன்னங்குடா கண்ணகியம்மன் கோயில்களில் அதிக கூத்துக்கள் ஆடப்படுகின்றன. கன்னங்குடா கண்ணகியம்மன் கோயிலில் 5 கூத்துக்கள் ஒவ்வொரு வருடமும் அளிக்கை செய்யப்படும். கூத்தர்கள் அவர்கள் கூத்துக்களை அங்கு அளிக்கை செய்ய ஆசைப்படுவர். இங்கு அளிக்கை செய்யப்படும் கூத்துக்கள் தரமானவையாக இருக்கும் என்னும் அவிப்பிராயம் மக்களிடம் காணப்படுகின்றது. இங்கு கூத்துக்களை பார்த்து இரசிக்கும் மக்களின் கருத்துக்கணிப்பை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் நிலையும் உள்ளது. இங்கு அளிக்கை செய்யப்பட்ட கூத்துக்களில் எது சிறந்தது என்னும் கருத்துக்கணிப்பு இங்கு கூடும் கூத்தர்களினாலும் மக்களினாலும் வழங்கப்படுகின்றது. அதனை சகலரும் ஏற்றுக்கொள்வர் (சிந்தாத்துரை,கு., கன்னங்குடா).



ISBN 978-955-627-120-1

சடங்குகள், திருவிழாக்கள் தொங்கினால் கூத்தர்களிடம் கூத்துக்களை முற்பதிவு செய்து கூத்துக்களை கோயிலில் அளிக்கை செய்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வர். இங்கு அவதானிக்கக்கூடிய விடயம் சிறந்த கூத்து எனப் பெயர் எடுத்த கூத்துக்களையே கோயில் நிர்வாகத்தினர் அவர்களின் கோயில்களில் நிகழ்த்துகை செய்வதற்கு முயற்சிப்பர் (ரவிச்சந்திரன்,அ., வவுணதீவு). கூத்துக்களை முற்பதிவு செய்துகொள்வதில் பல்வேறு சமூகக் காரணிகள் தாக்கம் செலுத்தும்.

சடங்குகாலத்தில் கோயில்களில் கூத்தாடுவதற்கென்றே அதிகமான கிராமங்களில் கூத்து பழக்கும் வழக்கம் காணப்படுகின்றது. சடங்கு காலத்தில் கோயில்களில் கூத்தாடுவதில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றின் அடிப்படையான ஒன்றாக அமைவது மக்களிடம் உள்ள நம்பிக்கையாகும். ‘‘கூத்தாடுவது என்பது கடவுளுக்கு காணிக்கை செலுத்தும் கைங்கரியமாகவும் காணப்படுகின்றது. எமக்கேற்பட்ட துன்பங்கள் தீரவேண்டுமென்று நேர்ந்து எமது நேர்த்தியை சுவாமிக்கு கலையாகப் படைக்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றார்கள்’’ (2011, ப:16). இதன்படி கோயில்களில் கூத்தாடாவிட்டால் அவர்களின் சமூகத்திற்கு பல இடையூறுகள் நேரலாம் எனக் கருதுகின்றனர்.

பொழுதுபோகக்கு மமோபாவம் அடுத்துக் குறிப்பிடத்தக்கது. புனித சக்தியை வழிபடுவதற்கான சடங்கார்ந்த நிகழ்வுகள் மூலமாகவே தனிநபர்கள் தங்கள் தனிமனிதத்துவத்தைத் தாண்டிச் சமூகமாக ஒன்றுபடுகின்றனர் என்கின்றார் எமில் தர்கைம் அவர்கள். இங்கு தமது ஒருமையையும் ஆளுமையையும் உருவாக்கும் கூட்டு உணர்வுகள் மற்றும் கூட்டுக் கருத்துக்களை அவ்வப்போது மறு உற்பத்தி செய்வதை உணராத சமூகமே இல்லை என்பார். (சுந்தர், காளி., 2005, ப:17). இவ்வடிப்படையில் சடங்கு காலத்தில் மகிழ்வமிப்பு அனுபவம் என்பது சடங்கிற்காக கூடும் மக்களிடம் ஏற்படும் அடிப்படையான அழகியல் வேட்கையாகும். இதனை அவர்கள் பாரம்பரிய கூத்தளிக்கைகளில் இணைவதன் மூலம் பூர்த்தி செய்கின்றனர். கூத்தளிக்கை சமூக உறுப்பினர்கள் ஒன்றினைந்து அழகியல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வெளியைத் தோற்றுவிக்கின்றது. இவ்வெளி சமூக இணைவு, சமூக ஊடாட்டம், அது வழங்கும் அழகியல் அனுபவத்தை பெற்றுக் கொள்ளல் என்பவற்றிக்கு ஏற்றவிதத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளி ரங்கராஜன் குறிப்பிடும் கருத்துக்கள் நோக்கத்தக்கன. ‘‘நாட்டுப்புறக் கூத்து என்பது நாட்டுப்புற வெளியின் பிரமாண்டத்திற்கு இணையான உயிரியக்கத்தின் அடையாளமாக இருக்கின்றது. நாட்டுப்புறங்கள் உள்ளவரை அது நாட்டுப்புற வாழ்வின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக வாழ்ந்துகொண்டுதான் இருக்கும். கூத்து என்பது அவர்களுக்கு கடந்தகாலமாக இல்லாமல் இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கும் ஒரு நிகழ்காலமாக உள்ளது’’ (ரங்கராஜன், வெளி., 2008, பக்:74-75). சமய வழிபாட்டிற்காகக் கூடும் சமூக உறுப்பினர்கள் அவர்களின் சமூக வாழ்வியலின் பிரிக்கமுடியாத ஒரு வடிவமாக கூத்துக்களை பார்த்து இரசிப்பதற்கான ஒரு வெளியாகவும் சடங்கு, திருவிழா காலத்தைக் கருதுகின்றனர். இக்காலத்தில் மக்களிடம் இருக்கும் கலியாட்ட உணர்வு, வேடிக்கை உணர்வு, பக்தி உணர்வு என்பன கூத்தை இரசிப்பதற்கான தயார்படுத்தலை ஏற்படுத்தி விடுகின்றது.

சடங்குகளும் திருவிழாக்களும் வைகாசியில் கண்ணகியம்மன் சடங்குடன் தொடங்கினால் புரட்டாதியில் இடம்பெறும் திரௌபதியம்மன் கோயிற் சடங்குடன் நிறைவடைகின்றன. இக்காலத்தில் மட்டக்களப்பில் ஒன்றன்பின் ஒன்றாக



ISBN 978-955-627-120-1

கோயில்களில் சடங்கும் திருவிழாவும் இடம்பெற்றுக்கொண்டே இருக்கும். இக்காலத்தில் அனேகமான கோயில்களில் பாரம்பரிய கலை அளிக்கை இடம்பெறுவதால் கூத்தை இரசிப்பதில் ஆர்வம் உள்ள மக்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று கோயில் சடங்கில் இணையும் சமூகத்துடன் அவர்களின் பிரசன்னத்தையும் வழங்கி பாரம்பரிய அளிக்கைகளை குறிப்பாக கூத்துக்களைப் பார்த்து இரப்பதை பொதுவானதொரு வழக்கமாகக் கொண்டுள்ளனர். இரவு வேளையிலேயே கூத்துக்கள் இடம்பெறுவதால் அது அவர்களின் இயல்பு வாழ்கையைப் பாதிப்பதில்லை.

சடங்கு காலத்தில் பாரம்பரிய அளிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் தாக்கத்தினை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாக பாரம்பரிய கலைநிகழ்த்துகைகள் எடுத்துரைக்கும் கதைப்பொருள் அமைகின்றது. இவர்களின் இறைவழிபாட்டு உணர்வுடன் தொடர்புடையதாகவும் ஆத்மார்த்த ரீதியாக அவர்களை தூய்மைப்படுத்துவதாகவும் திருத்திப்படுத்துவதாகவும் இறைவழிபாட்டு உணர்வை மிகுவிப்பதாகவும் அமைந்திருப்பதைப் குறிப்பிடலாம். மகாபாரத, இராமாயன, அறநீதிக் கதைகளே இக்கலையாடலில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இது அவர்களுக்கு இவ்வழிபாட்டுக் காலத்தில் பார்த்து இரசிப்பதற்குத் தேவையானதொரு விடயமாக விளங்குகிறது.

தமிழ் நாட்டிலுள்ள கோயில்களிலும் சடங்குகாலங்களில் பாரம்பரிய கலைநிகழ்த்துகைகளை மேற்கொள்ளும் மரபு பேணப்படுகின்றது. மட்டக்களப்பு போன்று அல்லாமல் தமிழ் நாட்டில் சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் அளிக்கை செய்யப்படும் கூத்துக்கள் அவர்களின் சடங்கு வழிபாட்டுடன் தொடர்புடையனவாக விளங்குகின்றன. புரிசையில் இடம்பெற்ற கூத்துப்பற்றி வெளி ரங்கராஜன் குறிப்பிடும் கருத்துக்களின் மூலம் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

> ‘‘புரிசையில் பதினெட்டு நாள் நடக்கும் மகாபாரதக் கூத்தின் இறுதி நாளில் நடிகர்களும், பார்வையாளர்களும் இணைந்து திரௌபதி அம்மனை வழிபடும் நிகழ்வுடன் கூத்து முடிகின்றது. இங்கு நடிகர்களும் பார்வையாளர்களும் நாடகம் என்கின்ற வடிவில் இறுதியில் சடங்காகிப் போகிற காரியத்தில் இணைந்து பங்கேற்பவராகின்றார்கள். உறக்கத்திலும் விழிப்பிலும் கூத்துப் பாத்திரங்களின் வீரியமான இயக்கங்களின் ஊடாக நினைவுப் பயனம் கொள்ளும் அவர்கள் கனவுநிலை, யதார்த்தம், புனைவு, சடங்குத் தன்மை ஆகியவற்றிக்கான வடிகால்களை அங்கு காண்கின்றனர்’’ (ரங்கராஜன், வெளி., 2008, பக்:73)

என விபரித்துக் கொண்டு செல்கின்றார். இங்கு கூத்தளிக்கையும் அவர்களின் சடங்கு வழிபாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்படையனவாக அமைத்ருப்பதை இவ்வபரிப்பு எடுத்தியம்புகின்றது. மட்டக்களப்பில் இவ்வாறான ஊடாட்டத்தை நாம் காண்பதில்லை. வசந்தன் கூத்தில் கண்ணகியின் புகழ் எடுத்துரைத்தல், திரௌபதியம்மன் கோயிலில் நடத்தப்படும் மகாபாரதத்துடன் தொடர்புடைய கூத்துகளில் அங்கு நிகழ்த்தப்படும் சடங்குடன் தொடர்புடைய மகாபாரத கதை தொடர்புபடலாம். மட்டக்களப்பில் கலைநிகழ்த்துகையும், சடங்கு அல்லது திருவிழா ஆகிய சமய வழிபாடும் வேறுபட்ட தளங்களில் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.



ISBN 978-955-627-120-1

## 4. முடிவுரை

மட்டக்களப்பில் பாரம்பரிய கலைகளின் சில பிரதேசங்களில் இன்றுவரை செழிமையுடன் முன்னெடுக்கப்படுகின்றது. இவற்றின் பயில்வின் தொடர்ச்சியைப் பேணுவதில் அப்பிரதேசங்களில் நிலவும் கோயிற் சடங்குகள் திருவிழாக்கள் அடிப்படையான களமாக அமைகின்றது. சடங்கு சூழலில் பாரம்பரிய கலைகள் பயிலப்படுவதற்கு சமூகங்களிடையே காணப்படும் நம்பிக்கையும் இவற்றை பார்த்து இரசிப்பதற்கென்று ஒரு இரசிகர் குழாம் இருப்பதும் அடிப்படையாகக் காரணமாகும். பாரம்பரிய கலையை முன்னெடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட எந்தவிதமான அறிவியல்பூர்வமான முயற்சியும் அது நிலைகொண்டுள்ள சமூகச் சூழலில் அதன் உயிர்ப்பை தொடர்ந்து பேணுவதிலும் முன்னெடுப்பதிலும் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது இங்கு தெளிவுபடுத்தப்பட்டது. சடங்குகளுடனும் திருவிழாக்களுடனும் பாரம்பரிய கலையைத் தொடர்புபடுத்தும் இவ்ஆய்வு பாரம்பரிய கலைகள் அவை வாழ்வதற்கு பொருத்தமான சமூகச் சூழல் வாய்ககும் போது அவை தொடர்ந்து நிலைத்திருக்கும் என்பதை உறுதியாகின்றது. இது பாரம்பரிய கலையின் இயல்பும் பலமும் ஆகும்.

**உசாத்துணைகள்**


கந்தையா, வீ.சி. (2002). மட்டக்களப்புத் தமிழகம். எக்ஸில், பிராஞ்ஸ்.

சதாசிவஐயர்,த. (1940). மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு. மட்டக்களப்புத் தெற்கு தமிழ் ஆசிரியர் சங்கம்.

சுந்தர், காளி. (2005). திருமுகமும் சுயமுகமும் : பண்பாட்டாய்வுக் கட்டுரைகள், காரோன் - நீரோன் பதிப்பகம், சொக்கிக் குளம், மதுரை.

முத்தையா, இ. (2011). ‘‘மதிப்புரை’’, கூத்து மீளுருவாக்கம் ஈழக்கூத்தின் புதிய பரிமாணம். கருத்து = பட்டறை, மதுரை, இந்தியா.

ரங்கராஜன், வெளி. (2008). நாடகம், நிகழ்வு, அழகியல் நிகழ்த்துகை அழகியல் பற்றிய கட்டுரைகள். அடையாளம், சென்னை – 05.

ராஜதுரை, எஸ்,வி. (இணை) (1991). அந்தோனியோ கிராம்ஷி வாழ்வும் சிந்தனையும், சென்னை.

வித்தியானந்தன்,சு. (1990.) நாடகம் நாட்டாரியற் சிந்தனை. தமிழகம் வெளியீடு - 01, தெல்லிப்பளை.

ஜெயசங்கர், சி. (2011). கூத்து மீளுருவாக்கம் ஈழக்கூத்தின் புதிய பரிமாணம். கருத்து = பட்டறை, மதுரை, இந்தியா.


**நேர்காணல்**

அபிலாஸ், எல்., லங்காபுத்திர லீசிங் கம்பனி ஊழியர், வயது 26, O/L, விழாவட்டுவான், 13.07.2017.

கோடீஸ்வரன், வி., கூத்துக்கலைஞர், வயது 25, A/L, கன்னங்குடா, மட்டக்களப்பு, 02.08.2017.



ISBN 978-955-627-120-1

சிந்தாத்துரை,கு., கூத்துக்கலைஞர், வயது 43, O/L, கன்னங்குடா, 05.08.2017.

தருமராசா,எல்., அண்ணாவியார், வயது 58, 4ஆம் ஆண்டு, புதுமுகத்துவாரம், மட்டக்களப்பு, 14.07.2017.

ரவிச்சந்திரன்,அ., சிற்றூழியர், வவுணதீவுப் பிரதேசசபை, 8ஆம் வகுப்பு, வவுணதீவு, நாவற்காடு, 04.08.2017.



ISBN 978-955-627-120-1